# 4 ஆண்டுகளில் 1500 விருதுகளை பெற்றிருக்கிறோம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரை...

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

கோடியாவது பயனாளிக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் மருந்து பெட்டகத்தை தந்தார். இப்படி, இரண்டு கோடியே 24 இலட்சத்து 87 ஆயிரத்து 798 பேரை மக்களைத் தேடி மருத்துவம் சென்றடைந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). இரண்டு கோடியே 24 இலட்சத்து 87 ஆயிரத்து 798 பேரை மக்களைத் தேடி மருத்துவம் சென்றடைந்திருக்கிற காரணத்தால்தான் ஐ.நா. சபை இதுவரை இந்திய வரலாற்றில், வேறு எந்த மாநிலத்திற்கும் அல்லது வேறு எந்த மாநில அரசு நடத்துகிற நிர்வாகத்திற்கும் ஐ.நா. விருது நேரடியாகத் தந்ததில்லை.

**விருதுகள்**

முதன்முறையாக தமிழ்நாட்டின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு United Nation Inter-Agency Task Force Award என்கிற ஒரு விருதை கடந்த ஆண்டு தந்து மகிழ்ந்திருக்கிறார்கள். ஒரு முறை பயன்பெற்றவர்கள் 2 கோடியே 24 இலட்சத்து 87 ஆயிரத்து 798 பேர் என்றாலும், repeated services என்ற வகையில் 'மக்களை தேடி மருத்துவம்' என்கிற திட்டத்தால், பயன்பெற்றிருப்பவர்களுடைய எண்ணிக்கை 4 கோடியே 44 இலட்சத்து 39 ஆயிரத்து 458 பேர் ஆகும். இந்த மகத்தான திட்டம் இன்னமும் சீரிய வகையில், செம்மாந்த வகையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் பீடு நடை போட்டுக்கொண்டிருக்கிறது.

**கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்**

'வருமுன் காப்போம்' என்கிற மகத்தான திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் மருத்துவத் துறையில் ஒரு மகத்தான புரட்சி '108 ஆம்புலன்ஸ்' சேவை திட்டம் வந்தது; கலைஞர் காப்பீட்டுத் திட்டம் வந்தது; உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றது. அவர் முதலமைச்சராக இருந்தபோதுதான், மருத்துவ முகாம்கள் நடத்துகின்ற வருமுன் காப்போம் என்கிற திட்டம் வந்தது. கடந்த பத்தாண்டுகளில் அந்தத் திட்டத்திற்கு மூடு விழா நடத்தினார்கள். வருமுன் காப்போம் என்கிற அந்தத் திட்டம் நடத்தப்படாமல் விடுபட்டுவிட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற தற்கு பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், மீண்டும் அந்த வருமுன் காப்போம் திட்டத்தை 'கலைஞரின் வருமுன் காப்போம்' என்கின்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) 2021 செப்டம்பர் திங்கள் 29 ஆம் தேதி சேலம் மாவட்டம், வாழப்பாடியில் புதிதாகத் தொடங்கி வைத்தார்கள். சேலம் மாவட்டம், வாழப்பாடியில் புதிதாகத் தொடங்கி வைத்த அந்த வருமுன் காப்போம் திட்டத்தின்படி ஒவ்வொரு ஆண்டுகளிலும் ஒன்றியத்திற்கு மூன்று இடங்களிலும், ஒவ்வொரு மாநகராட்சிக்கு நான்கு இடங்களிலும், சென்னைக்கு மட்டும் 15 இடங்களிலும் என்று சொல்லி, 1,500 முகாம்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும் என்று அன்றைக்கு அறிவித்தார்கள். அந்த வகையில் இதுவரை கடந்த நான்கு ஆண்டுகளில் நடத்தப்பட்டிருக்கின்ற முகாம்களின் எண்ணிக்கை 5,653. (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தால் பயன்பெற்றிருப்போர்களின் எண்ணிக்கை 52 இலட்சத்து 88 ஆயிரத்து 102 பேர்.

**இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டம்**

அதேபோல இங்கு பேசியவர்கள் சொன்னார்கள். இன்னுயிர் காப்போம் திட்டம். நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய மிகச் சீரிய திட்டங்களில் ஒன்று; 'இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48'. 2021 டிசம்பர் திங்கள் 18 ஆம் தேதி மேல்மருவத்தூரில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி தமிழ்நாடு முழுவதிலும் எங்கே விபத்து நேர்ந்தாலும், விபத்து நேர்ந்தவர்களை அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தால், முதல் 48 மணி நேரத்தில் அரசின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் தருவது. இதற்கு முன்னரெல்லாம் விபத்து நேர்ந்தால், அவரைப் பார்த்து உச்சு கொட்டிவிட்டு மட்டும்தான் செல்வார்கள். ஆனால், விபத்து நேர்ந்தவரை மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தால், அவருக்கு ஐந்தாயிரம் ரூபாய் ஊக்கத் தொகை என அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இன்றைக்கு வருமுன் காப்போம் திட்டத்தில் எத்தனைப் பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்றால், 3 இலட்சத்து 56 ஆயிரத்து 843 பேர் ஆகும். 3 இலட்சத்து 56 ஆயிரத்து 843 உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது; பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அதற்காக இந்த அரசு செலவிட்டிருக்கின்ற தொகை 318 கோடியே 31 இலட்சம் ரூபாய்.

**இதயம் பாதுகாப்போம் திட்டம்**

இப்படிதான் இங்கு பேசிய நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள் சொன்னார்கள். இதயம் காப்போம். இன்றைக்கு இதய நோய்கள் உலகம் முழுவதும் உள்ளவர்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இளம் வயதினருக்கும் இதய நோய் பாதிப்பு அதிகரித்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதய நோய் பாதிப்பு என்றால், பெரும்பகுதியாக வட்டார மருத்துவமனைகளிலும், மாவட்ட மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மட்டுமே அதற்கான சிகிச்சை இருக்கும். இதய பாதிப்புகள் எல்லோருக்குமே எல்லா இடத்திலும் வரும். எனவே, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலிருக்கின்ற 8,713 துணை சுகாதார நிலையங்களிலும், 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஆக மொத்தம் 10,999 மருத்துவ கட்டமைப்புகளில் loading dose drugs என்கின்ற ஒரு மருந்து பெட்டகத்தை இருப்பு வைக்கச் சொன்னார்கள். Aspirin, clopidogrel, atorvastatin என்கிற மூன்று மருந்துகள், 14 வகையான மாத்திரைகளை உடனுக்குடன் தந்து அவர்களுடைய உயிர்களைக் காப்பாற்றுவது. ஒரு மகிழ்ச்சியான செய்தியினைச் சொல்கிறேன். அந்த loading dose drugs மூலம் இதுவரை காப்பாற்றப்பட்டிருக்கக்கூடிய உயிர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 275 ஆகும். 16 ஆயிரத்து 275 உயிர்கள் இன்றைக்கு 'இதயம் காப்போம்' திட்டத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதேபோல இந்த அரசின் இன்னுமொரு ஒரு சீரிய திட்டம்; சிறப்பு திட்டம் 'சிறுநீரகம் பாதுகாப்போம்' என்கிற திட்டம்.

**சிறுநீரகம் பாதுகாப்போம் திட்டம்**

2023 ஜூலை திங்கள் 10 ஆம் தேதி சேலம் மாவட்டம் காரையாம்பட்டி பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் நோக்கம் சிறுநீரக பாதிப்புகள் என்பது இப்போது அதிகரித்துக் கொண்டிருக்கிற காரணத்தால், அனைவரையும் பரிசோதிக்கும் பரிசீலனை செய்யும் அந்தத் திட்டம் தற்போது மிகச் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது. அந்த வகையில், சிறுநீரக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயனடைந்திருப்போரின் எண்ணிக்கை 99 இலட்சத்து 66 ஆயிரத்து 331 பேர் இதுவரை அந்தத் திட்டத்தால் பயன் பெற்றிருக்கிறார்கள்.

**மக்களைத் தேடி ஆய்வகம்**

மக்களைத் தேடி மருத்துவம் போலவே, மக்களைத் தேடி ஆய்வகம். காலையில் சென்று lab-ல் test எல்லாம் எடுப்பது--அதாவது வீட்டுக்கே சென்று test எடுத்து, பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பி, அதனுடைய result-யை அவர்களுக்கு அனுப்புவது. இந்தத் திட்டத்திற்கு பெயர் மக்களைத் தேடி ஆய்வகம். இந்த மக்களைத் தேடி ஆய்வகத் திட்டம் நாகர்கோவிலில் தொல்லவிளை என்ற பகுதியில் 2024 பிப்ரவரி திங்கள் 5 ஆம் தேதி தொடங்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி, இதுவரை பயன்பெற்றிருப்பவர்கள் 14 இலட்சத்து 69 ஆயிரத்து 995 பேர். மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற திட்டத்தின்போது தொழிலாளர்கள் பணிக்கு சென்றுவிட்டால், அவர்கள் இந்தத் திட்டதிலிருந்து விடுபட்டுவிடுவார்களே, தொழிலாளர்களை பரிசோதனை செய்ய முடியாமல் போய்விடுமே என்கின்ற வகையில் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களை தேடி மருத்துவம் என்கின்ற மகத்தான திட்டத்தை தொடங்கச் செய்து, அந்தத் திட்டம் 2024 ஜனவரி திங்கள் 9 ஆம் தேதி நம்முடைய Hyundai company-ல் தொடங்கி, இன்றைக்கு அதன்மூலம் ஆயிரக்கணக்கானவர்கள் பயனடைந்து வருகிறார்கள். பேசியவர்கள் எல்லாம் இன்றைக்கு மிகுந்த கவனத்தோடு எடுத்து சொன்னது புற்றுநோய் பாதிப்புகள் அதிகரித்து வருகிறது என்பது. தமிழ்நாடு முழுவதிலும் இந்த புற்றுநோய் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் pilot basis என்று சொல்வார்களே, அந்த வகையில் புற்றுநோய்க்கான பரிசோதனைகளை 18 வயது நிரம்பிய ஆண்களாக இருந்தாலும், 30 வயது நிரம்பிய பெண்களுக்கும் இந்த புற்றுநோய் பாதிப்புகள் குறித்த முழு பரிசோதனைகளையும் மேற்கொள்ள சொன்னார்கள். அந்த வகையில் நான்கு மாவட்டங்களில் அந்த பரிசோதனைகள் தொடங்கப்பட்டன. ஈரோடு, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, நாகர்கோவில், கன்னியாகுமரி ஆகிய இந்த நான்கு மாவட்டங்களில் புற்றுநோய் பரிசோதனைகள் தொடங்கி, இதுவரை பரிசோதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 14 இலட்சத்து 9 ஆயிரத்து 418 பேர். அதில் ஒரு துயரமான செய்தி. இந்த 14 இலட்சம் பேர் பரிசோதித்ததில் இதுவரை புற்றுநோய் பாதிப்பு தனக்கு இருக்கிறது என்றே தெரியாமல் இருந்தவர்களுடைய எண்ணிக்கை 340 பேர். அந்த 340 நபர்களுடைய உயிர்கள் உரிய நேரத்தில் அவர்களுக்கான பாதிப்பு கண்டறியப்பட்டிருப்பதால், அவர்களுடைய உயிர்கள் இன்றைக்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

**நடப்போம் நலம் பெறுவோம் திட்டம்**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எங்களை ஜப்பானில் இருக்கிற JICA நிறுவனத்திற்கு நிதி ஆதாரத்தைக் கேட்டு பெறுவதற்கு செல்ல சொன்னார்கள். அப்படி சென்றபோது நானும், துறையின் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் அங்கே சென்றபோது, அங்கே நாங்கள் பார்த்த ஒரு விஷயம் "நடப்போம் நலம் பெறுவோம்". Health Walk என்கிற ஒரு திட்டத்தைப் பார்த்தோம். ஒரு 8 கிலோ மீட்டர் நீளத்திற்கான நடைபாதை. அந்த நடைபாதையில் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ஒரு sign board. விழிப்புணர் வாசகங்கள். நடந்தால் கிடைக்கும் நன்மைகள் போன்ற பல்வேறு வாசகங்கள். அங்கே இருப்பவர்களைக் கேட்டோம், அது என்ன 8 கிலோ மீட்டர் கணக்கு என்று. 8 கிலோ மீட்டர் நடந்தால் 10,000 அடி வரும். இது உடலுக்கு நல்லது. ஒவ்வொரு மனிதனுக்கும் நல்லது என்றார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். முதலமைச்சர் அவர்கள் ஜப்பானில் ஒரு இடத்தில் இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களிலும் அதை அமைத்திட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். அந்த வகையில், 38 மாவட்டங்களிலும் அந்த Health Walk திட்டம் 2023 நவம்பர் திங்கள் 4 ஆம் தேதி நம்முடைய தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் துவங்கப்பட்டு, இன்றைக்கு மிகச் சிறப்பாக சென்றுக்கொண்டிருக்கிறது.

**பாதம் பாதுகாப்போம் திட்டம்**

அதேபோல், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதம் பாதிப்பு, கால்களை இழப்பது, பாதங்களை இழப்பது மிகப் பெரிய அளவிலான சவலான விஷயம். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இதற்கு பிரத்யேகமான கவனம் எடுக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், பாதம் பாதுகாப்போம் என்கின்ற திட்டம் 2024 ஜூலை திங்கள் 15 ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் இந்த பாதம் பாதுகாப்போம் clinic, surgery போன்ற எல்லா விஷயங்களையும் முழுமையாக செய்வதற்கு இன்றைக்கு பயிற்சி கொடுத்து, தனியார் மருத்துவமனை குறிப்பாக கோவையிலிருக்கிற GEM நிர்வாகத்தோடு ஒரு MoU செய்து, இன்றைக்கு அந்தப் பணியும் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

செயற்கை கருத்தரித்தல் மையங்கள். புற்றீசல்போல் தனியார் கருத்தரித்தல் மையங்கள். இலட்சக்கணக்கில் செலவிடப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. தேவையான ஒன்றாகவும் இருக்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அரசு மருத்துவமனைகளிலும் செயற்கை கருத்தரித்தல் மையங்களைக் கொண்டுவர வேண்டுமென்று அறிவுறுத்தியதன் விளைவாக, இன்றைக்கு எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் தொடங்கி வைத்திருக்கிறோம். மதுரையில் அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சேலம், கோவை மற்றும் திருச்சி போன்ற இடங்களிலும் மிக விரைவில் செயற்கை கருத்தரித்தல் மையங்கள் வரவிருக்கின்றன.

புற்றுநோய் பாதிப்புகளுக்கான ஓர் ஆராய்ச்சி மையம். மும்பையைப் பொறுத்தவரை, Tata Cancer Memorial Research Centre. இன்றைக்கு பெரிய அளவில், இந்தியாவுக்கே பெரிய புற்றுநோய் ஆராய்ச்சி மையமாக இருக்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலும் அது போன்றதொரு மையம் அமைத்திட வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், காஞ்சிபுரம், காரப்பேட்டை என்ற பகுதியில் 250 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால், Anna Cancer Research Institute மிக விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு ஏராளமான

## 4 ஆண்டுகளில் 1,894 புதிய மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது!

பேருக்கு தமிழ்மீது ஆர்வம் வந்திருக்கிறது, அக்கறை வந்திருக்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மருத்துவ படிப்பையும் தமிழிலே கொண்டு வருவதற்கு நடைமுறைகளைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக இன்றைக்கு இந்தத் துறையின் சார்பில்

23 மருத்துவ நூல்கள். ஆங்கிலத்திலிருந்த 23 மருத்துவ நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னமும் 26 மருத்துவ நூல்கள் தமிழாக்கம் செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதேபோல், இன்னொரு மிகச் சிறப்பான நிகழ்ச்சி. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இதற்கு முன்னர் பாம்பு கடித்தால், நாய் கடித்தால் மருந்து இல்லை. தமிழ்நாட்டில் பாம்புகளும், நாய்களும் எங்கே அதிகமாக இருக்கும் என்றால், கிராமப்புறங்களில் இருக்கும்; மலைக்கிராமங்களில் இருக்கும். மருத்துவத் துறையின் கட்டமைப்பு என்பது, பாம்புக்கடிக்கும், நாய்க்கடிக்குமான மருந்துகள் வட்டார மருத்துவமனைகளுக்கு மட்டும்தான் வர வேண்டும்; மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கு மட்டும்தான் வர வேண்டும் என்கிற நிலை இருந்தது. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இதை மாற்றி, கிராமப்புறங்களிலும் அந்த மருத்துவச் சேவையைக் கொண்டுவர வேண்டுமென்று அறிவுறுத்தியதன் விளைவாக, இன்றைக்கு 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ASV என்று சொல்லக்கூடிய பாம்புக்கடி மருந்தும், ARV என்று சொல்லக்கூடிய நாய்க்கடி மருந்தும் முழுமையாக இருப்பு வைக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இன்றைக்கு பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு விருதுகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். ஐ.நா. விருது மட்டுமல்ல. 2012 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ஒரு விருதை அறிவித்தது. அதாவது, எந்த ஆரம்பச் சுகாதார நிலையம், எந்த வட்டார மருத்துவமனை மிகச் சிறப்பாக மக்களுக்குச் சேவையாற்றுகிறதோ, மிகச் சிறப்பான மருத்துவக் கட்டமைப்பைப் பெற்றிருக்கிறதோ, மிகச் சிறப்பான சுற்றுச்சூழலுக்கேற்ற பசுமைப் பகுதியைக் கூடுதலாகப் பெற்றிருக்கிறதோ அந்த அமைப்புக்கு, அவர்களுடைய சேவைத் திறனைப் பாராட்டி, அந்தக் கட்டமைப்பை மேம்படுத்தியதைப் பாராட்டி விருது ஒன்று தருவோம் என்று 2012 ஆம் ஆண்டு அறிவித்தார்கள். அந்த விருதுக்கு பெயர் National Quality Assurance Standards. National Quality Assurance Standards என்கிற அந்த விருது அ.தி.மு.க. ஆட்சியில், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை, ஒன்பது ஆண்டுகளில் அந்த அரசு பெற்ற விருதுகளின் எண்ணிக்கை 69. நான் திரும்பவும் அதைப் பதிவு செய்கிறேன். 2012 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஒன்றிய அரசு தந்த அந்த விருதுகள், கடந்த கால ஆட்சியில் பெற்ற விருதுகளின் எண்ணிக்கை 69. கடந்த நான்காண்டுகளில் மருத்துவமனைகளின் கட்டமைப்புகளை மேம்படுத்தி, மருத்துவச் சேவையின் தரத்தை உயர்த்தி, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இந்த நான்காண்டுகளில் பெறப்பட்டிருக்கிற விருதுகளின் எண்ணிக்கை 755. (மேசையைத் தட்டும் ஒலி) நான்காண்டுகளில் பெறப்பட்டிருக்கிற விருதுகளின் எண்ணிக்கை 755. ஒன்பது ஆண்டுகளில், கடந்தகால ஆட்சியில் பெறப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை 69.

அதேபோல் இன்னொரு விருது. அதாவது, Labour Room Quality Improvement Initiative விருது. கர்ப்பிணி தாய்மார்களுக்கான அறுவை சிகிச்சை அரங்கங்களை இன்றைக்கு தரமுயர்த்துவதன் சம்பந்தமான விருது. இந்த விருதும் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிற விருதாகும். இந்த விருதுகள் எப்போதிலிருந்து வழங்கப்படுகிறது என்றால், 2017 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டிலிருந்து

2021 ஆம் ஆண்டு வரை, நான்காண்டுகளில் கடந்தகால அரசு பெற்ற விருதுகளின் எண்ணிக்கை 29. கடந்த நான்காண்டுகளில் மட்டும் இந்த அரசு பெற்றிக்கிற விருதுகளின் எண்ணிக்கை 82. (மேசையைத் தட்டும் ஒலி) 82 விருதுகள் நான்காண்டுகளில் பெறப்பட்டிருக்கின்றன. 29 விருதுகள், நான்காண்டுகளில் கடந்த காலத்தில் பெறப்பட்டிருக்கின்றன. ஆக, அவர்கள் பெற்ற விருதுகளைக்காட்டிலும் மூன்று மடங்கு கூடுதலான விருதுகளை இந்த LaQshya என்று சொல்லக்கூடிய அந்த நிகழ்வில் இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம்.

இந்த விருதுகள் மட்டுமல்ல food safety-ல் உணவு பாதுகாப்புத் துறையில் மாவட்ட வாரியாக விருதுகள், மாநில அளவிலான விருதுகள். இதேபோல ஒவ்வொரு துறையிலும் TANSACS-ல் AIDS சம்பந்தமான விருதுகள், ரத்த சேகரிப்பு போன்ற பல்வேறு இடங்களில் பெற்ற விருதுகள் ஏறத்தாழ 1,500 விருதுகளை இதுவரை இந்த அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் பெற்றிருக்கிறது.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய கோரிக்கை ஓரளவிற்கு 100 சதவிகிதம் முறையாக நிறைவேற்றப்பட்டும் கொண்டிருக்கிறது. திருக்கோவிலூர் கண்டாச்சிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட வட்டார மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கை; அதேபோல பெண்ணாகரம் தொகுதியில் நாகதாசன் பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாக மாற்றவேண்டும் என்கிற கோரிக்கை; பண்ருட்டியில் நெல்லிக்குப்பம் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றவேண்டுமென்கிற கோரிக்கை; விளவங்கோடு தொகுயில் அருமனை பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதா நிலையத்தை மேம்படுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கை; தளி தொகுதியில் உணுசட்டி என்கிற பகுதியில் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றிடவேண்டுமென்கிற என்கிற பகுதியில் அந்த கோரிக்கை. இப்படி ஏராளமாக கோரிக்கைகள் இருக்கின்றன. நிச்சயம் ஒன்றிய அரசிடம் கேட்டிருக்கிறோம். ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக வேண்டுமென்று கோரிக்கை, 500 மேற்பட்ட துணை சுகாதார நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை, 100-க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும், வட்டார மருத்துமனைகளாகவும் மாற்றவேண்டுமென்ற கோரிக்கை வைத்து இருக்கிறோம். இவையெல்லாம் கிடைக்கும்போது, நிச்சயம் உறுப்பினர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சென்னை பெருநகர, இன்றைக்கு CMDA என்று சொல்லக்கூடிய இந்த அமைப்பு, பெருமதிப்பிற்குரிய அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு மருத்துவத் துறைக்கு ஏராளமாக துறைகள் முன்வந்து உதவிக்கொண்டிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை இப்படி ஏராளமாக துறைகள் மருத்துவத் துறையோடு இணைந்து இன்றைக்கு பல்வேறு வகைகளில் இந்தத் துறையின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்துக்கொண்டிருக்கிறார்கள் என்றாலும் CMDA என்கிற துறை கொளத்தூரில் இன்றைக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் கட்டமுடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டிருக்கிற மருத்துவமனைக்கு 90 கோடி ரூபாயை CMDA நிர்வாகத்தின்மூலம் தந்து சிறப்பித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) RSRM என்று சொல்லப்படுகிற இராயபுரத்தில் இருக்கிற ஒரு மருத்துமனைக்கு 75 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி அரசு மருத்துவமனைகளின் தரம் உயர்வதற்கு CMDA நிர்வாகம் குறிப்பாக இந்தத் துறையின் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் இந்தத் துறையின் வளர்ச்சிக்காக CMDA நிர்வாகத்தின் சார்பில் நிதியும் தந்துக்கொண்டிருக்கிறார். அவருக்கும் இந்த தருணத்தில் நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, கேள்வி நேரத்தின் போது பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் உங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் துணை சுகாதார நிலையக் கட்டடங்களை கட்டுவதற்கு, ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களை கட்டுவதற்கு நிதி தரவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, ஏராளமாக சட்டமன்ற உறுப்பினர்கள் பெரிய மனதோடு அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியை தொடர்ந்து தந்து, உதவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய மகிழ்ச்சி நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வகையில் கடந்த 4 முறை, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை இந்தத் துறையின் சார்பில் 463 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. 463 அறிவிப்புகளும் ஒவ்வொரு ஆண்டும் இந்த துறையின் சார்பில், இந்த ஆண்டு எத்தனை அறிவிப்புகள் அறிவித்து இருக்கிறோம், அந்த அறிவிப்புகள் எதுவெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எதுவெல்லாம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது, போன்ற விஷயங்களை புத்தமாக அச்சடித்து கடந்த 4 ஆண்டுகளும் தந்திருக்கிறோம். இந்தத் துறையின் வரலாற்றில் முதன்முறையாக அறிவிப்புகளின் செயல்பாட்டை புத்தகமாக தந்து மக்கள் நல்வாழ்வுத் துறை என்கின்ற ஒரு மகிழ்ச்சியை இங்கே மீண்டும் பதிவு செய்கிறேன். அந்த வகையில் இந்த 463 அறிவிப்புகளும் ஏறத்தாழ 90 சதவிகிதத்திற்கு மேலாக இன்றைக்கு செயலாக்கம் பெற்றிருக்கிறது. அதற்கான முழு தகவல்களை 4 ஆண்டு சாதனைகள் புத்தகத்தை இன்றைக்கு விரிவாக தந்திருக்கிறோம். இதை அனைத்து உறுப்பினர்களும் முடிந்த அளவிற்கு படிக்கவில்லை என்றாலும் பார்த்தாலே தெரிந்துக் கொள்ளமுடியும். மிகச் சிறப்பாக மருத்துவத் துறையின் நடவடிக்கைகளை, நம் தொகுதியில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்துக் கொண்டால் மட்டுமே நாம் மக்களை தேடி செல்கிறபோது அவர்களிடத்தில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அந்த வகையில் அந்தப் புத்தகங்களை படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஏராளமாக உறுப்பினர்கள் இந்தத் துறைக்கு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் 258 வெட்டுத் தீர்மானங்கள் வாயிலாக இன்றைக்கு பல்வேறு கோரிக்கைகளை தந்திருக்கிறார்கள். 258 வெட்டுத் தீர்மானங்களையும் படித்து இருக்கிறேன். வேண்டுமானால் நேரம் இருந்தால் 258 வெட்டுத் தீர்மானங்களையும்கூட நான் இங்கே சொல்ல தயார், நேரம் இருக்காது.

அதனால், நீங்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களுக்கு நான் ஏற்கெனவே சொல்ல பதிலிலிருந்தும், தற்போது சொல்லவிருக்கிற அறிவிப்புகளிலிருந்தும் உங்களுக்கு சரியான தீர்வு கிடைக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, அந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டும், இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு புதிதாக 118 அறிவிப்புகளை வெளியிட இருக்கிறோம். இந்த 118 அறிவிப்புகள் குறித்து சொன்னால் நீண்ட நேரம் ஆகும். காரணம், இந்த 118 அறிவிப்புகளையும் நீங்களே ஆர்வத்தோடு, ஒவ்வொரு அறிவிப்பாக படித்துப் பார்க்கும்போதுதான், நம்முடைய மாவட்டத்திற்கு என்ன கிடைத்திருக்கிறது! நம்முடைய தொகுதிக்கு என்ன கிடைத்திருக்கிறது! என்கின்ற அந்தச் செய்தி கிடைக்கும். எனவே, அந்த 118 அறிவிப்புகளையும் நான் சொல்வதைக் காட்டிலும் suspense ஆக நீங்களே படித்துத் தெரிந்து கொள்வது நல்லது என்கிற வகையில், ஒரு 10 அறிவிப்புகளை மட்டும், மிக முக்கியமான ஒரு பத்து அறிவிப்புகளை இங்கே சொல்லி உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

**அறிவிப்புகள்**

**புதிய துணை சுகாதார நிலையங்கள்**

8. மக்கள் தொகைக்கேற்ப 642 நகர மற்றும் கிராம துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், துணை சுகாதார துணை நிலையங்கள் (HSCs), சுகாதார அமைப்புகளுக்கும் மக்களுக்கும் இடையேயான முதல் தொடர்பு அமைப்பாகும். குறிப்பாக, கிராமங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் முதன்மை சுகாதார சேவைகளை வழங்குவதில் அவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. நகர்மயமாக்கல் காரணமாக 10,000 மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள பகுதிகளில், மக்கள் தொகைக்கேற்ப 642 நகர மற்றும் கிராம துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.

இன்றைக்கு புதிதாக மக்கள்தொகைக்கு ஏற்ப கிராமங்கள் மற்றும் நகரங்களில் 642 புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**வண்ணக்குறியீடு கொண்ட படுக்கை விரிப்புகள்**

26. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 7 நாள் வண்ணக் குறியீடு கொண்ட படுக்கை விரிப்புகள் வழங்கப்படும்.

நாள்தோறும் புதிய படுக்கை விரிப்புகளை பயன்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வண்ணத்துடன் கிழமைகள் பொறித்த வண்ணப் படுக்கை விரிப்புகள் உபயோகப்படுத்தப்படும். படிப்படியாக இத்திட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாட்டில் முதல் முறையாக அரசு மருத்துவமனைகளில், இன்றைக்கு நாம் படுக்கை விரிப்புகளைப் பார்க்கிறோம். படுக்கை விரிப்புகளைப் பொறுத்தவரை கிழிந்த நிலையில், அழுக்கான நிலையில் பல்வேறு மருத்துவமனைகளுக்கு செல்கிற போது இருக்கிறது. இன்றைக்கு அனைத்து மருத்துவமனைகளிலும் நாம் washing facility-ஐ செய்திருந்தாலும்கூட, கிழிந்த போர்வைகளை மாற்றுவதைப் பொறுத்தவரையில் சிறிது சுணக்கம் இருக்கிறது. எனவே, இந்த நிலையை அகற்றுகிற வகையில், தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடாக தினந்தோறும் ஒரு புதிய போர்வை படுக்கைமீது இருக்க வேண்டும் என்கிற வகையில் திங்கட்கிழமையா, திங்கட்கிழமை பொறித்த ஒரு படுக்கை விரிப்பு, செவ்வாய்க் கிழமையா, செவ்வாய்க்கிழமை பெயர் பொறித்த ஒரு படுக்கை விரிப்பு, செவ்வாய்க் கிழமை அந்த மருத்துவமனைக்கு செல்கிறவர், திங்கட்கிழமைக்கான போர்வை இருந்தால், என்ன நேற்றைக்கான போர்வையை இங்கே வைத்திருக்கிறீர்கள், இதை எடுங்கள் என்று சொல்லலாம். அந்த அளவிற்கு இன்றைக்கு தமிழ்நாட்டில் முதல் முறையாக அரசு மருத்துவமனைகளில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வண்ணங்களுடன் கிழமைகள் பொறித்த வண்ண படுக்கை விரிப்புகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொரு சிறப்பான அறிவிப்பு.

**எடைக் குறைவான குழந்தைகளுக்கு சிசு பாதுகாப்புப் பெட்டகங்கள்**

7. "முதலமைச்சரின் சிசு பாதுகாப்புப் பெட்டகம்" ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பிரிவுகளிலிருந்து (Special Newborn Care Unit) விடுவிக்கப்படும் 50,000-க்கும் மேற்பட்ட எடை குறைவான குழந்தைகளின் தொடர் கவனிப்பிற்காகவும் அவர்களது ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தவும், இரும்புச்சத்து சொட்டு மருந்து, வைட்டமின் டி3 மற்றும் மல்டி வைட்டமின் சொட்டு மருந்துகள் ஆகியவை அடங்கிய "முதலமைச்சரின் சிசு பாதுகாப்புப் பெட்டகம்" ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இந்த மகிழ்ச்சியான செய்தியை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**500 புதிய முதுநிலை மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்கள் தொடங்குதல்**

1. பதிமூன்று அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் 500 புதிய முதுநிலை மருத்துவப் பட்ட மேற்படிப்பு இடங்கள் (PG Seats) உருவாக்கப்படும்.

இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், திருவள்ளூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, அரியலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, கரூர் ஆகிய 13 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் 500 முதுநிலை மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்கள் (PG Seats) உருவாக்கப்படும். இந்த மகிழ்ச்சியான செய்தியை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**கிராமங்களை நோக்கி டயாலிசிஸ் சிகிச்சை வசதிகள்**

5. ஐம்பது மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தேர்வு செய்து, டயாலிசிஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

முதல் முறையாக, கிராமங்களில் உள்ள 50 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தேர்வு செய்து, அந்தப் பகுதியில் உள்ள தேவைப்படும் நோயாளிகளுக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் தனியார்/தன்னார்வலர்கள் பங்களிப்புடன் ஏற்படுத்தப்படும்.

இதுவரை டயாலிசிஸ் செய்வது என்பது நகர்புரங்களில், மாநகரங்களில் மட்டுமே இருக்கிறது. டயாலிசிஸ் யாருக்கெல்லாம் தேவைப்படுகிறது? சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டவர்கள் கிராமங்களிலும் இருப்பார்கள், மலைக் கிராமங்களிலும் இருப்பார்கள். அவர்களெல்லாம் நகர் பகுதிக்கு வந்து டயாலிசிஸ் செய்து மீண்டும் ஊருக்குச் செல்லும்போது அவர்கள் அடைகிற சிரமத்திற்கு அளவே இல்லை. எனவே, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே முதல் முறையாக கிராமங்களை நோக்கி டயாலிசிஸ் சிகிச்சை வசதிகள், 50 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதியதாக டயாலிசிஸ் சிகிச்சை மையங்கள் அமைக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**டயாலிசிஸ் நோயாளிகளுக்கான சிறப்பு உணவுமுறை**

11. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், பராமரிப்பு டயாலிசிஸிக்கு உட்படும் அனைத்து நோயாளிகளுக்கும் புரதச்சத்து நிறைந்த உணவு வழங்கப்படும்.

பராமரிப்பு டயாலிசிஸ் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு (Maintenance Hemodialysis) புரதம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வாக, இந்நோயாளிகளுக்குப் புரதச்சத்து நிறைந்த உணவுகளான 150 மி.லி. பால், 2 வேகவைத்த முட்டையின் வெள்ளைக்கரு, 50 கிராம் சுண்டல், குறைந்த சோடியம் மற்றும் பொட்டாசியம் உள்ள 3 பிஸ்கட்கள் (>20 கிராம்) வழங்கப்படும்.

டயாலிசிஸ் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு உடனடியாக புரத சத்துள்ள உணவு வேண்டும். புரத சத்துள்ள உணவு இல்லையென்றால் உடல் பெரிய அளவில் சோர்வுற்று காணப்படும். எனவே, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், மனிதநேயத்தோடு இன்றைக்கு அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் டயாலிசிஸ் சிகிச்சைக்காக வருபவர்களுக்கு புரதம் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் இனி வழங்கப்படும் என்று அறிவிக்கிறோம்.

**கையடக்க ஊடுகதிர் கருவிகள்**

47. எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய, 50 கையடக்க ஊடுகதிர் கருவிகள் (HAND-HELD X-RAY DEVICE) ரூ.6 கோடி செலவில் அனைத்து சுகாதார மாவட்டங்களுக்கும் (HUD) வழங்கப்படும்.

தொலைதூரப் பகுதி மற்றும் கிராமப்புறங்களில் வசிக்கும் பொதுமக்களிடையே காசநோய், நிமோனியா, எலும்பு முறிவு ஆகிய நோய்களை எளிதில் கண்டறியும் வண்ணம் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய 50 கையடக்க ஊடுகதிர் கருவிகள் (HAND-HELD X-RAY DEVICE) ஒவ்வொரு சுகாதார மாவட்டத்திற்கும் வழங்கப்படும்.

**எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவித் தொகை**

6. தமிழ்நாட்டில் உள்ள 7,618 எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக மாதந்தோறும் ரூ.1,000/- நிதி உதவி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 7,618 எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களுடன் வசிக்கும், 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக மாதந்தோறும் ரூ.1,000/- நிதி உதவி வழங்கப்படும்.

பெருமதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கடந்த வாரம் கேள்வி நேரத்தின்போது கேட்டார். எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தைகளுக்கு பாதுகாப்பு, அவர்களுக்கு வழங்கப்படும் தொகை குறித்து கேட்டார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், கருணை உள்ளத்தோடு, தமிழ்நாட்டில் பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் எண்ணிக்கை 7,618 ஆகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஒருமுறை ரூபாய் 5 கோடியை நிதியாகத் தந்து, தற்போது அறக்கட்டளைமூலம் ரூ.25 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதில் கிடைக்கும் வட்டியின்மூலம் 7,618 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் கல்வி மருத்துவ தேவைகளுக்கு மாதந்தோறும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆயிரம் ஆயிரம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் பதிலுரை வழங்கினார்.